Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 100

National Tamil Daily தேசிய தினசரி

(22-5-65)

விசுவாவசு வைகாசி 9 முஹர்ரம் பிறை 20 சனிக்கிழமை

## மீண்டும் பரீட்சை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப பாடசாலையின் 1965 – 66ம் ஆண்டுக்கெண வர்த்தகப் போதனைக்குரிய புதுமுகப் பரீட்சை மீண்டும் இம்மாதம் 29-ந் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற இப் பரீட்சையில் மோசடி நடைபெற்றதாகப் புகார் தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின் பின் பரீட்சையைத் திரும்பவும் நடத்துவதென முடிவு செய்யப் பட்டது.



ஏகவினியோகஸ்தர்கள்
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# டட்லி - செல்வா பேச்சு விபரம் எழுத்தில் உண்டு

## “ஆனல் ஒப்பந்தமோ உறுதியோ இல்லை”

## பீலிக்ஸ் கேள்விக்கு பிரதமர் பதில்

கொழும்பு, வெள்ளி

“இரண்டு முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் என்ற முறையில் தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கும், ஐக்கிய தேசி யக்கட்சித் தலைவர் என்ற முறையில் எனக்கும் (டட்லி சேனநாயக்கா) நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் எழுத்தில் இருக்கின்றன. இந்த விபரங்களை வெளியிடுவது இப்பொழுது உசித மல்லவென்று நான் கருதுகிறேன்” என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் தோம்பே பிரதிநிதியின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று காலை சபாநாயகர் சேர் அல்பர்ட் பீரிஸ் தலைமையில் கூடியபோது தோம்பே பிரதிநிதி திரு பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா முன்னறிவித்தல் கொடுத்திருந்தபடி கேள்விகள் கேட்டார்.

கேள்வி: 22-1-65 ம் தேதிக்குப் பின்னர் திரு எஸ் ஜே.வி. செல்வநாயகத்துடனே அல்லது தமிழரசுக் கட்சியுடனே பிரதமர் ஏதாவது ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கிறாரா? அல்லது திரு செல்வநாயகத்திற்கோ தமிழரசுக் கட்சிக்கோ எழுத்தில் ஏதாவது உறுதியளித்திருக்கிறாரா?

இக்கேள்விக்குப் பிரதமர் டட்லி பதிலளிக்கையில் பின் வருமாறு குறிப்பிட்டார்

**பல்வேறு விஷயங்கள் பற்றிப் பேச்சு**

நானும் திரு எஸ் ஜே வி செல்வநாயகமும் இரு வேறு பட்ட கட்சிகளின் தலைவர்கள் என்ற முறையில் பல்வேறு சமயங்களில் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறேம்.

திரு. செல்வநாயகத்துடன் அல்லது தமிழரசுக்கட்சியுடன் ஒப்பந்தம் செய்திருந்தாலும் எழுத்தில் வாக்குறுதி கொடுத்திருந்தாலும் அதன் விபரங்களைப் பிரதமர் சபையில் வெளியிடுவாரா? என்ற திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் மற்றொரு கேள்விக்கு பிரதமர் பதிலளிக்கையில் வெளியிடமுடியாது என்றார்.

“ஏன் வெளியிடமுடியாது?” என்ற கேள்விக்குப் பிரதமர் பதிலளிக்கையில் “இரண்டு கட்சித் தலைவர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விபரங்கள்பற்றி வெளியிடுவது உசிதமென நான் கருதவில்லை” என்றார்.

பேச்சுவார்த்தைகளைத் தவிர ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருக்கிறாரா அல்லது எழுத்தில் வாக்குறுதி கொடுத்திருக்கிறாரா என்பதை தயவு செய்து பிரதமர் சபைக்குத் தெரிவிப்பாரா?” என்ற திரு. பீலிக்ஸின் மற்றொரு கேள்விக்குப் பிரதமர் பதிலளிக்கையில் இல்லையென்று முதற் கேள்விக்குப் பதிலளித்தாகி



விட்டதென்று. பிரதமர் திரு. டட்லி மேலும் பேசுகையில் திரு. செல்வநாயகத்துக்கும் தமக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் எழுத்தில் எழுதப்பட்டனவென்று கூறினர்.

டாக்டர் என் எம் பெரேரா: அந்த தஸ்தாவேஜு சபைக்குத் தெரியப்படுத்தப்படுமா?

பிரதமர்: “இல்லை.”

ஒரு எம்பி: ஏன் முடியாது? அது தனிப்பட்ட தஸ்தாவேஜு அல்ல!

பிரதமர்: அது ஒரு தனிப்பட்ட தஸ்தாவேஜு தான். ஏனெனில் அரசாங்கம் அமைக்கப்படுமுன் செய்துகொள்ளப் பட்ட ஒரு ஒப்பந்தம் அது!

எம். பி: அந்த தஸ்தாவேஜு நாடு முழுவதையும் சம்பந்தப் பட்டது.

பிரதமர்: அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு முன்னர் இரு கட்சித் தலைவர்களுக்கிடையில் [illegible] சம்பந்தப்பட்டதே அது.

(மேலும் [illegible])

## பார்லிமெண்டில் தமிழில் தஸ்தாவேஜுகள்

### சபாநாயகர் வாக்குறுதி

பம்பலப்பிட்டி, வெள்ளி

பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்களும் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் பத்திரங்களும் இனித் தமிழில் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் சேர் அல்பர்ட் பீரிஸ், கிளிநொச்சி எம் பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு இன்று உறுதியளித்ததாகத் தெரிகிறது.

இன்று சபையில் வழங்கப்பட்ட பத்திரங்கள் சில தமிழில் வழங்கப்படவில்லை என்றும் இது தமிழ் பேசும் உறுப்பினர்களுக்குச் சிரமமேற்படுத்துவதாகவும் உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாக்குமாறும் பண்டிதர் இரத்தினம், சபாநாயகரை அவரது ‘சேம்பரில்’ சந்தித்துக் கேட்டுக் கொண்டார்.

இதுவிஷயமாகத் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுப்பினர்களின் உரிமையை பாதுகாப்பது தமது [illegible] வென்றும் சபாநாயகர் [illegible] பணித்ததாக அறியப்படுகிறது.

## டொமினிக்கனில் பல கிளர்ச்சி தலைவர்கள் பலி

### அமெரிக்க தாக்குதல் காரணம்

சாந்தாடொமிங்கோ, மே 21

டொமினிக்கனில் நேற்று ஏற்பட்ட சண்டையில் கர்னல் கமானோவின் மந்திரி ஒருவரும், மற்றும் நான்கு கிளர்ச்சித் தலைவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மந்திரி கொலை செய்யப்பட்டதற்கு அமெரிக்க துருப்புக்கள்தான் காரணம் என கிளர்ச்சிக்காரர்கள் கூறினர். ஆனல் தற்காப்புக்காகவே அமெரிக்கர் சுட்டதாக அறிவிக்கப் பட்டது.

இச்சண்டை 8 மணி நேரம் நடைபெற்றதென்றும், ஆனல் கொல்லப்பட்டவர்களையும், காயமடைந்தவர்களையும் அகற்றும் பொருட்டு 24 மணிநேரம் சண்டை நிறுத்தம் ஏற்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

---

## சனசமூக நிலைய பொதுக் கூட்டம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வை சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கதலைவர் திரு எஸ். இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு. எம் திருச்செல்வம் ஸ்தலஸ்தாபன மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டதை பாராட்டும் தீர்மானமும் நிலையத்துக்கு ஒரு கொடி தயாரிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்: திரு க. துரைரத்தினம், உபபோஷகர்கள்: கே. விவேகானந்தன், க. சபாரத்தினம், தலைவர்: எஸ். இராமநாதன், உபதலைவர்: சி. சண்முகானந்தம் செயலாளர்: க. இராசேந்திரன், உப செயலாளர்: வே. தங்கவடிவேல்; பொருளாளர்: த. சக்திவேல், கணக்குப்பரிசோதகர்: திரு பொன். இராசா, மற்றும் ஆறு நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், சனி

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியில் 18 வருடங்களுக்கு மேலாக பொறுப்பு வாய்ந்த பதவிகள் வகித்துவந்த திரு சி. வே. கண்ணன் தமது தாயகமான இந்தியா திரும்புவதையொட்டி நேற்று முன்தினம் வாலிபமுன்னணியினர் ஒரு பிரிவுபசார விருந்தளித்தனர்.

---

## பகிரங்க சொற்பொழிவு

யாழ்ப்பாணம், சனி

சமசமாஜ புரட்சிவாத வாலிபர்கள் சம்மேளனத்தின் சார்பில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்று மாலை திரு. வை. காராளசிங்கம் ‘தேசிய’ அரசாங்கமும் தமிழ் பேசும் மக்களும் என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எங்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஜனநாயகம் என்பது அடக்கம் என்றுபொருள்; நாம் தவறே செய்யமாட்டோம் என்று பொருள் அல்ல.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 9 உ (22-5-65)


## உறுதியான திட்டமும் செயலும் தேவை

புதிய 'தேசிய' அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இது வரை முன்னைய அரசாங்கத்தின் ஊழல்களைப் பற்றியே எடுத்துக்காட்டி வருகிறது. ஊழல், லஞ்சம், மோசடி ஆகியவை பற்றியும் மக்கள்வங்கி, கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபனம், லங்கை வானொலி ஆகியவைகளின் நிர்வாக ஊழல்பற்றியும் பல பல திடுக்கிடும் செய்திகளை அரசாங்கம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. கிருமிகள் நிறைந்த வடிகால்வாயின் மத்தியில் நின்று அதைச் சுத்தம் செய்வதை மேற்பார்வையிடும் பரிசோதகரல்ல அரசாங்கம்!

செயலில் நிறைவேற்றக்கூடிய ஒரு உறுதியான திட்டமே இன்று நாட்டுக்குத் தேவை. அடுத்தது என்ன என்பது தான் மக்கள் கேட்கும்கேள்வி.

திறைசேரி காலியாகவுள்ளதென்றும் அந்நிய செலாவணி குறைந்துள்ளதென்றும் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. நாட்டின் எதிர்காலப் பொருளாதார விருத்திக்கு பார்திட்டமிடுகிறார்கள் குறுகிய கால அபிவிருத்தித்திட்டமும் நீண்டகால அபிவிருத்தித்திட்டமும் உருவாக்குவதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளது. எமது ஜனநாயக அண்டைநாடான இந்தியா இந்தமுறையில் திட்டமிட்டு இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கால்வைத்துள்ளது; இந்தியாவில் ஸ்திரமான ஆட்சி உள்ளதென்பதும் இங்கு இருந்ததில்லையென்பதும் உண்மையே.

ஆயினும் இப்பொழுது பலதரப்பட்டவர்களையும்கொண்ட தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. நாட்டின் சமூக மற்றும் சேவைகளுக்குத் தேவையான வருமானத்தை அடைவதற்குரிய திட்டங்களையும் மற்றும் வழிவகைகளையும் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் தெரிந்துகொள்ள மக்கள் அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். மற்றும்பலரைப் போல நாமும் தேசிய அபிவிருத்தித் திட்டம்வேண்டுமென்றும் அதன் அவசியத்தையும் இதற்கு முன்பும் பலதடவைகளில் வலியுறுத்தியிருக்கிறோம்.

கட்டுப்பாட்டற்ற இறக்குமதியின் முறையும் இறக்குமதித் தீர்வை முறையும் வருமானம் பெறும் காலனி ஆதிக்கக் கொள்கை விடுதலையடைந்த சுதந்திரநாட்டுக்கு நன்மையளிக்காது. எமது உள்நாட்டு விளைபொருள் உற்பத்திப் பொருள்களையும் கைத்தொழில் உற்பத்திப் பொருள்களையும் ஏற்றுமதி செய்வதன் மூலமே நாம் எமது அந்நிய செலாவணியைச் சம்பாதிக்க வேண்டும்.

உணவு, உடை மற்றும் கட்டிடப் பொருள்களான அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிகளைக் குறைப்பதின் மூலம் நாம் நமது அந்நிய செலாவணியைச் சேமிக்க வேண்டும். இதற்கு நாம் உணவு, உப உணவுப்பொருள்கள், அத்தியாவசிய உடைகள் மற்றும் கட்டிடப்பொருள்களான சீமெந்து, ஓடு முதலியவைகளின் உற்பத்தியை இங்கு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்டுள்ள கைத்தொழில் கூட்டுஸ்தாபனத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவேண்டியதும் அதற்குத் திறமையுடன் வேலை நடைபெற வழிசெய்யவேண்டியதும் அவசியம். மேலும் பல கைத்தொழில் கூட்டுஸ்தாபனங்களை அமைப்பது பற்றியும் திட்டமிடப்படவேண்டும்.

கிராமங்களைக்கொண்ட நாடு இலங்கை. இங்கு குடிசைக் கைத்தொழில்களுக்கு நிறைய வாய்ப்புண்டு. ஆரம்பத் திட்டங்களுடன் தேசிய முறையில் சரியான திட்டம் தயாரிக்கப் படவேண்டும். ஜப்பானிய மக்களைப் பின்பற்றி நாமும் இங்கு குடிசைக் கைத்தொழில்களையும், கைத்தொழில்களையும் நவீனமுறையிலும், யந்திர முறையிலும் விருத்திசெய்ய வேண்டும். இதுவிஷயம் சம்பந்தமாகப் பார்லிமெண்டிலும் பொதுமேடைகளிலும் பத்திரிகைகளிலும் பலரும் பலவித யோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

பேச்சும், எழுத்தும்போதும். செயல்வேண்டும்; செயலில் நிறைவேற்றும் திட்டமே வேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## பார்லிமெண்ட் தெரிவுக்குழுவும் வட்டமேசை மகாநாடுகளும்

எங்கள் தேசிய பிரச்னைகளுக்கு வட்டமேசை மகாநாடு நடாத்த வேண்டுமென்று கூறப்படும் ஆலோசனை சிறந்த தொன்றாகும். சோல்பரித்திட்டம் 18 ஆண்டுகளுக்கு முன்னர் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட சமயத்தில் சிங்கள-தமிழ் சமூகத்தினரிடையே சில விஷயங்களில் அபிப்பிராய பேதம்நிலவியது காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா இருந்த அச்சமயத்தில் இப்பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு நான் இந்த ஆலோசனையையே கூறினேன். இதே ஆலோசனைதான் வேறு இடங்களிலும் திரும்பத் திரும்ப கூறப்பட்டன. உந்த ஆலோசனை இன்று மீண்டும் வந்திருப்பது மனதிற்கு திருப்திகரமான ஒரு விஷயமாகும்.

இந்த வட்டமேசை மகாநாடு நடைபெற்றால் இதனை பாராளுமன்ற அங்கத்தவர்களுடனும் அரசியல்வாதிகளுடனும் நிறுத்தக் கூடாதென்று நான் விரும்புகின்றேன். இந்த உத்தேசிக்கப்பட்டவட்டமேசை மகாநாட்டில் பௌத்த சங்கத்தின் அங்கத்தவர்களையும், பலதரப்பட்ட மதத்தலைவர்களையும், கல்விமான்களையும், வர்த்தகக்கைத்தொழில் துறைப் பிரதிநிதிகளையும், இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்களையும் மற்றும் தேசிய விஷயங்களில் ஈடுபாடு காட்டும் தலைவர்களையும் கடமைபுரியும்வண்ணம் அமைப்பது வரவேற்கத்தக்கதாகும்.

தமிழ்மக்களை பொறுத்வரையில் இவர்கள் பூர்வாங்க மகாநாடொன்றை தங்களுக்குள் நடாத்தி சில பொறுப்பான விஷயங்களில் ஒற்றுமைப்பட்டு பின்னர் நடக்கவிருக்கும் பெரிய வட்டமேசை மகாநாட்டில் தங்கள் திட்டங்களை சமர்ப்பிப்பது சிறந்ததாகும். இப்படிசெய்யின் பெரியவட்டமேசை மகாநாடு நடாத்துவதற்கு இச்செய்கை இலகுவாக அமையும்.

இந்த வட்டமேசை மகாநாடு காமதமின்றி நடத்தப் படவேண்டும். அப்படியெனில் அரசியல் சாஸனம் திருத்துவது சம்பந்தப்பட்ட பார்லிமெண்டரி தெரிவுக் குழுவின் வேலை சுமுகமாக நடைபெற வழியமைவதாக இருக்கும். இதனால் அரசியல் சாஸனத்தைத் திருத்துவது பற்றித் தெரிவுச்சபை முன் கொடுக்கப்படும் சில முக்கிய பிரச்னைகளில் அபிப்பிராயபேதம் குறைய இடமுண்டு. வட்டமேசை மகாநாடு இத்துறையில் பாராளுமன்ற தெரிவுச் சபைக்குச் சில பிரதான வேலைகளைச் செய்து அவர்களுக்கு முதலுதவிகளை அளிக்கக்கூடியதாக அமையும், இதன்காரணமாக அரசியல் சாஸனத்தைத் திருத்துவதில் முயற்சியும் வருப்புவாத இனரீதியான எண்ணங்களைக் குறைத்துக் கொள்வதற்கும் தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்கும் நாட்டின் சுபிட்சத்தையும் வளர்ச்சியையும் மேற்கொள்வதற்கும் தீவிரமான கட்டம் ஏற்படும், இச்செய்கை எங்கள் நாட்டை வெளிநாட்டுத் தலையீடுகளிலிருந்தும் பெரிய வல்லரசுகளின் கருத்து வித்தியாசங்களிலிருந்தும் எமக்களைப் பாதுகாக்கும்.

முதலில் தனிப்பட்டமுறையிலும் பிரத்தியேகமான முறையிலும் 'வட்டமேசைக்கான பேச்சுவார்த்தைகளை நடாத்தினால் தான் இம்மகாநாடு வெற்றிகரமாக நடைபெற முடியும். தெரிவுச்சபை விசாரணை தொடங்குமுன்னர் ஆரம்ப வேலையில் ஈடுபட வேண்டியிருக்கும் அதேபோல வட்டமேசை மகாநாட்டிற்கு முதலில் பூர்வாங்க வேலைகள் ஏற்கனவாக செய்யப்படல் வேண்டும்.

எஸ். சிவசுப்பிரமணியம்,
கொழும்பு 12.

## உடன்பாடு பற்றி தெரியாது

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சமஷ்டிக் கட்சிக்கும் ஏற்பட்ட உடன்பாடு பற்றிய விபரங்கள் தமிழ்க்காங்கிரஸ் தலைவருக்கு தெரிந்ததாக கூறிக்கொள்வது உண்மையல்ல வட்டமேசைமகாநாடு எதற்கு என்று அச்சுவேலியில் நடைபெற்ற கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. திரு வ. நவரத்தினம் கேட்டிருப்பது ஆச்சரியமளிக்கிறது.

தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தேர்தல் கூட்டங்களிலும் தேர்தல் முடிந்தபின்பும் அண்மையில் நடந்த வருடாந்த மகாநாட்டிலும் சர்வகட்சி மகாநாடு மூலமே சிறுபான்மையினரின் எல்லா வகையான பிரச்னைகளையும் நிரந்தரமாகத் தீர்த்துவைக்க முடியும்என்று கூறியிருக்கிறோம். எங்கள் கட்சியின் முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து அவைகளை நிறைவேற்றும் வழிவகைகளை தேடுவது எங்கள் கட்சியின் கடமையாகும், மொழிவிஷயத்தில் சிறந்த சலுகைகளை எமது கட்சிதமிழினததுக்கு பெற்றுக் கொடுத்துவிடும் என்று பயப்படுகிறார்கள் போலும். சமஷ்டிக்கட்சியின் [illegible] எங்கள் பிரச்னைகளை தீர்த்துவைக்காவிட்டால் என்பது எங்கள் கட்சிக்கோ மற்றும் இலங்கைவாழ் மக்களுக்கோ வெளிப்படுத்தப் படவில்லை.

எங்கள்கட்சியின் அபிப்பிராயப்படி எங்கள்கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய சந்தர்ப்பங்களும் வசதிகளும் இருக்கின்றன என்பதை அறிந்தோர் அளவிற்கு சுபீட்சமாக நிறைவேற்றக் கூடுமென்பதையும் அறிந்த சமஷ்டிக் கட்சியில் உள்ள சிலர் இம்மாதிரி பேசிவருகிறார்கள்.

தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டு தீர்மானங்களில் முக்கியமான சர்வகட்சி மகாநாடு சம்பந்தமான தீர்மானத்தை கண்டு பரபரப்பு கொண்டிருப்பது எதற்காக? சிறுபிள்ளைத்தனமாக விசாரணைசெய்வது ஆச்சரியமல்ல. காரணம் காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்தான் என்ற பழமொழிகான்.

எல்லா பிரச்னைகளையும் தனிப்பட்ட கட்சி ஒப்பந்தத்தாலோ, அல்லது சில கட்சிகள்மட்டும் கூடி முடிவுகாண்பதிலோ நிரந்தரமாக ஒரு முடிவு ஏற்படாது என்பது தான் தமிழ்க்காங்கிரஸின் நிரந்தரக் கொள்கை. இன்று நேற்றல்ல நாங்கள் இதை ஏற்கனவே கூறியுள்ளோம். எமது தலைவர் ஆறுவருடங்களுக்கு முன் கூறினர். தேசிய ரீதியில் முடிவுகாணப்பட வேண்டிய பிரச்னைகளுக்கு வட்டமேசை மகாநாடு கட்டாயமான வழியென்பதை மறுப்பவர்களே குழப்பி கோளாறு செய்யும் நோக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

தா. சங்கரப்பிள்ளை
காரியதரிசி,
அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ
யாழ்ப்பாணம்.

## கைத்தொழில் குலுக்கல் முடிவுகள்

கைத்தொழில் பொருட் காட்சி கலிப் முடிவுகள் பின் வருமாறு:-

1-ம் பரிசு
09 G 0309 ரூ 31,060

2-ம் பரிசு
11 F 0502 ரூ. 8 880

3-ம் பரிசு
10 M 0709 ரூ. 4,440

ரூபா 100 கொண்ட 100 ஆறுதல் பரிசுகளின் விபரம்:-

| | | |
|---|---|---|
| 10 S 0347 | 02 H 0365 | 03 L 0748 |
| 10 X 0942 | 07 S 0087 | 01 X 0868 |
| 01 X 0791 | 07 D 0060 | 06 S 0202 |
| 08 D 0651 | 02 W 0114 | 11 B 0539 |
| 06 J 0826 | 03 S 0831 | 02 U 0764 |
| 09 U 0684 | 03 D 0343 | 10 B 0145 |
| 11 R 0669 | 10 W 0294 | 06 Z 0184 |
| 10 V 0673 | 01 J 0014 | 02 I 0353 |
| 05 N 0766 | 09 D 0388 | 11 N 0226 |
| 09 Z 0942 | 01 T 0628 | 01 S 0021 |
| 11 P 0264 | 03 B 0817 | 01 B 0270 |
| 07 L 0148 | 04 H 0753 | 09 Q 0681 |
| 02 P 0394 | 01 N 0656 | 09 C 0179 |
| 05 Y 0206 | 01 Z 0747 | 02 C 0235 |
| 05 D 0480 | 09 L 0271 | 05 Z 0970 |
| 06 I 0394 | 02 T 0466 | 02 S 0423 |
| 07 J 0884 | 01 W 0973 | 08 C 0247 |
| 01 G 0826 | 10 Y 0413 | 04 P 0746 |
| 09 B 0584 | 05 S 0130 | 02 N 0694 |
| 08 N 0581 | 01 C 0185 | 08 K 0789 |
| 09 W 0162 | 03 U 0537 | 01 V 0321 |
| 11 W 0571 | 11 E 0137 | 02 Z 0268 |
| 08 S 0122 | 04 D 0236 | 01 F 0499 |
| 11 U 0156 | 05 A 0317 | 09 F 0564 |
| 07 F 0919 | 05 V 0813 | 03 R 0411 |
| 04 S 0355 | 11 Z 0513 | 09 E 0234 |
| 02 Z 0787 | 02 D 0638 | 01 N 0413 |
| 02 E 0573 | 11 T 0242 | 06 D 0794 |
| 08 B 0098 | 06 A 0429 | 07 S 0802 |
| 02 U 0971 | 04 Z 0068 | 08 U 0426 |
| 04 P 0026 | 10 V 0367 | 08 M 0855 |
| 03 F 0812 | 07 Z 0129 | 03 B 0369 |
| 02 B 0335 | 10 R 0012 | |
| 07 A 0090 | 09 Q 0469 | |

## சத்திரசிகிச்சை இல்லை

அக்கரைப்பற்று, வெள்ளி மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த இருவாரங்களாக எந்தவித சத்திரசிகிச்சையும் நடைபெறவில்லை. இங்கு சேர்ஜன் ஒருவரும் இல்லாத காரணத்தினாலேயே இவ்விதநிலை ஏற்பட்டது. இதன்காரணமாக நூற்றுக்கணக்கான நோயாளிகள் கஷ்டத்திற்குள்ளாக வேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.

## நாட்டிலும் நகரிலும்

முருங்கனில் கண்டெடுக்கப் பட்டதாகக் கூறப்படும் இரையும் சங்கைப்பற்றி ஒரு கடல் தொழில் செய்கிறவரிடம் கதைத்துக்கொண்டிருந்த போது அவர் பல ருசியான விஷயங்களைச் சொன்னார். ஆழ்கடலில் இதுபோன்ற சங்குகள் உயிர்வாழ்வதாயும் அவை மனிதர் கையில் அகப்படுவது மிக மிக அபூர்வமெனவும் அவர் கூறுகின்றார். ஆம் சங்குகள் கடலுக்குள் இருக்கும்போது உயிருள்ள பிராணிகள்தான்-சிப்பி, சோகி என்ற முதலியவற்றைப் போல சாதாரணமாக நாம் காணும் சங்குகளுக்கு புரி இடப்பக்கமாக வளைந்து வரும். இவை இடம்புரிச் சங்குகள்.

இவற்றைப்போல் ஆயிரம் சங்குகளுக்கு மத்தியில் ஒரு வலம்புரிச்சங்கு இருக்குமாம். இதைத்தான் கோவில்களில் தங்கப் பூண் போட்டுப் பாதுகாத்து சங்காபிஷேக காலங்களில் உபயோகிப்பார்களாம். வலம்புரிச் சங்கு தானாகவே ஓசை கொடாது. ஆனால் சஞ்சலம், சராசரம் என்ற பெயருள்ள வேறு அபூர்வ சங்குகள் தாமாகவே ஓசை உண்டு பண்ணும் தன்மை உள்ளனவாம். இரணைதீவுக் கடலில் இந்த சங்கு சப்திப்பதை இரவு நேரங்களில் தாம் கேட்டதாக அவர் கூறுகிறார். மட்டக்களப்புக் கடலேரியிலுள்ள பாடும் மீன்களுக்கும் இவற்றிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ? சமுத்திரம் இவற்றைப் போல இன்னும் எத்தனை எத்தனை இரகசியங்களையும் பொக்கிஷங்களையும் பதுக்கி வைத்திருக்கிறதோ, யார் கண்டார்கள்!

மனிதன் மேலே வானவெளியில் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு பறந்து செல்லமுடிந்து விட்டது. சமுத்திரத்தில் ஆகக் கூடிய தூரம் ஆறு மைல் தூரத்துக்குத்தான் போயிருக்கிறான்.

மகாபாரத யுத்தத்தில் கிருஷ்ண பகவான் உபயோகித்த சங்கின்பெயர் 'பாஞ்சசன்யம்'. இது எத்தனையோ ஆயிரம் வலம்புரிச்சங்குகளையுடைசூழ கட்டளுக்கடியில் வாழ்கிறதாம். தெய்விகத் தன்மை பொருந்திய இந்தச் சங்கை மனிதன் எப்படிக் காணமுடியும்?

செவிக்கு இனிமையில்லாத சங்கீதத்தைக் கேட்டு கழுதை கத்துவது போலிருக்கிறது என்று கூறுவோமல்லவா? அசல் கழுதை கத்துவது போலவே ஒரு பெண் சினிமா பாட்டு பாடியிருக்கிறார் என்றால் ஒப்புவீர்களா? சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் சரியாக காலரை மணிக்கு அந்த அற்புதமான பாட்டைக் கேட்டேன், கேட்க நேர்ந்து விட்டது! அது எந்தப் படத்தில் வருகிறதென்று தெரியவில்லை. ஆமாம் எங்கள் சொந்த வர்த்தக ஒலிபரப்பில் தான். வேறெங்கே இப்படிக் கண்ணராவியை (காதிராவி!) கேட்க முடியும்.

அதை ஒரு மேனாட்டு 'ஜாஸ' முறையில் அமைக்கிறேனென்று படத் தயாரிப்பாளர் நினைத்திருக்கிறார். அதைப் பாடிய பெண்ணும இசையமைப்பவர் சொல்லிக்கொடுத்த மாதிரி விக்கி விக்கி கர்த்தபம் குனறுவதுபோல் பாடியிருக்கிறார். நாட்டுப் புறப் பெண் ஒருத்தி முதன் முறையாக வாய்ப்பூச்சு, கண்பூச்சு பூசிக்கொண்டு காட்சியளித்தது போலிருந்தது அந்தப் பாட்டு! அவ்வளவு கோரமான கலப்படம் அது.

படத்தை 'சென்ஸர்' செய்பவர்கள் ஆபாசமான காட்சிகளைத் தணிக்கை செய்வது போல காதைக் கூசச்செய்யும் இம்மாதிரிப் பாட்டுக்களையும் வெட்டி வீசப்படாதா? தமிழ் சினிமாப் பாட்டுகள் இவ்வளவு

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எவரெஸ்ட் சிகரத்தை பாரத கோஷ்டி வெற்றிகண்டது

## உச்சியை அடைந்த இருவரில் டென்சிங்கின் மருமகனும் ஒருவர்

புதுடில்லி, மே 21

பாரத மலையேறும் கோஷ்டி ஒன்று 29,028 அடி உயரமான எவரெஸ்ட் சிகரத்தைப் வெற்றி கொண்டிருக்கிறது: 19 கோஷ்டி உறுப்பினர்களும், 44 ஷெர்பாக்களும் அடங்கிய இந்தக்கோஷ்டியில் இருவர் இமயத்தின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தனர்.

சிகரத்தின் உச்சியைஅடைந்துடன் அவர்கள் பாரத, நேபாள கொடிகளைப் பறக்க விட்டனர். உச்சியில் அரை மணி நேரம் கழித்தபின் அவர்கள் திரும்பியபோது தெற்கு சிகரத்திற்கருகே காற்றில் சிக்கிக் கொண்டனர் என்றும் பின் தப்பினர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

27930 அடி உயரத்தில் அவர்கள் முகாம் ஒன்றை அமைத்தனர். இவ்வளவு உயரத்தில் எந்த மலையேறும் கோஷ்டியும் முகாம அமைத்ததில்லை எனக் கூறப்படுகிறது.

பெப்ரவரி 22-ம் திகதி இவர்கள் மலையேறும் முயற்சியை ஆரம்பித்தனர்.

இந்த வெற்றி குறித்து ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் பாராட்டுச் செய்தியொன்றை அனுப்பியிருக்கிறார். முதலில் ஒரு பாரத நாட்டினரும் பின்பு ஒரு நியூஸீலந்து நாட்டினரும்தான் எவரெஸ்டை அடைந்தனர் என்றும் ஆனால் தற்போதைய வெற்றி முழுக்க முழுக்க பாரத முயற்சி என்றும் அவர் தனது பாராட்டுச் செய்தியில் கூறியிருக்கிறார்.

பிரதமமந்திரி திரு. சாஸ்திரி, பாதுகாப்புமந்திரி திரு. சாவன், தகவல்மந்திரி இந்திராகாந்தி, சிக்கிம் மகாராஜா ஆகியோரும் இந்தக் கோஷ்டியைப் பாராட்டினர்கள்.

சிகரத்தைச் சென்றடைந்த இருவரில் ஒருவர் முதலில் எவரெஸ்டை வெற்றிகொண்ட டென்சிங்கோர்கேயின் மருமகன்.

எவரெஸ்டை வெற்றி கொள்ள இந்திய மலையேறும் கோஷ்டி மேற்கொண்ட 4வது முயற்சி இது.

# விமான விபத்துப்பற்றி ஆராய பாக். கோஷ்டி சென்றது

## உயிர் தப்பிய அறுவர் நிலையும் மோசம்

கெய்ரோ, மே 21

கெய்ரோவுக்கருகே நேற்று நொறுங்கி விழுந்த பாகிஸ்தான் விமானத்திலிருந்து 121 பேர் மாண்டனர் என்றும் உயிர் தப்பிய மற்றும் 6பேரின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த விமானத்தில் 86 பாகிஸ்தானியர்களும் 6 சீனர்களும், 2 ஐக்கிய அராபியக்குடியரசுக்காரர்களும், 1 அமெரிக்கரும், 2 பிரிட்டிஷாரும் இருந்தனர்.

விமானவிபத்துபற்றி ஆராயும் பொருட்டு பாகிஸ்தான் குழுவொன்று கெய்ரோ சென்றிருக்கிறது.

கராச்சியிலிருந்து லண்டனுக்குச் சென்ற இந்த விமானம் கெய்ரோவுக்கருகில் வந்தபோது என்ஜினில் கோளாறு இருப்பதாய் விமானி அறிவித்தார் என்றும் அதன்பின் விமானநிலையத்துக்கும் விமானத்துக்குமிடையே தொடர்பு அற்றுப்போய்விட்டதென்றும் கூறப்பட்டது.

விமானத்தைச் சேர்ந்த 18 சிப்பந்திகளும் மாண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

# கண்ணதாசன் பத்திரிகைமீது வழக்கு

சென்னை, மே 21

தென்றல்திரை என்ற தமிழ்ப் பத்திரிகையின்மீதும் அதன் சொந்தக்காரரானதிரு. பஞ்சு அருணாசலம், மனேஜர் திரு. ஏ. ஆர். கண்ணப்பன், ஆசிரியர் திரு. கண்ணதாசன், திரு. டி. என். ராமச்சந்திரன் ஆகியோர்மீதும் டில்லி உதவி பிரதம இறக்குமதி-ஏற்றுமதி கட்டுப்பாட்டதிகாரி பிரதம மாகாண மாஜிஸ்டிரேட்கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். இறக்குமதி செய்யப்பட்ட சில அச்சக இயந்திரங்களை சட்டவிதிகளை மீறி விற்பதற்கு கடைசி நான்கு நபர்களும் சதி செய்ததாக இந்த வழக்கில் கூறப்பட்டிருக்கிறது.

சொந்த உபயோகத்துக்கு மட்டும் என்ற நிபந்தனையுடன் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களை சட்டவிரோதமாக பெங்களூரிலுள்ள தாய்நாடு தாபனத்திற்கு விற்க அவர்கள் சதி செய்தார்கள் என்பதே குற்றச்சாட்டு.

வழக்கு விசாரணை ஜூன் 11-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## பிரிந்து கூடிய குழந்தைகள்

டூரின், மே 21

10 நாட்களுக்கு முன் ரணசிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட ஸையாம் இரட்டைக் குழந்தைகள் சிகிச்சைக்குப் பிறகு முதற்தடவையாக பரஸ்பரம் கைகுலுக்கிக்கொண்டனர்.

6-வயதுள்ள இக்குழந்தைகளின் பெயர்கள் முறையே சாண்டிரு, கியலிப்பிஞ போகியா என்பவை.

ரணசிகிச்சைக்குப் பிறகு குழந்தைகளை பிராணவாயு கூடாரங்களில் படுக்கைகளில் விட்டிருந்தனர். அவர்களுக்கு சகஜமான உடல்நிலை ஏற்பட்டுவிட்டதால் பிராணவாயு கூடாரங்கள் அகற்றப்பட்டுவிட்டன.

இரு குழந்தைகளும் பொம்மைகளை வைத்து விளையாடின. இக்குழந்தைகளுக்குப் பலர் அன்புடன் பொம்மைகள் அனுப்பிவைத்திருக்கின்றனர்.

---

புதுடில்லி, மே 21

கட்ச் ரன் பகுதியில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பதை [illegible] நாராயண் [illegible] தெரிவித்திருக்கிறார்.

## பிராந்திய மொழிக்கு ரூ. 17 கோடி

புதுடில்லி, மே 21

4-வது திட்டத்தின் போது பிராந்திய மொழிகளின் அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கம் 17 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. முக்கிய தமிழ் நூல்கள் விரைவில் தேவநாகரி மொழியில் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

## கடற்படை தளம் நாசம்

சைகோன், மே 21

வட்வியட்னும் கடற்படைத் தளம் ஒன்றின் மீது 70-க்கதிகமான அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்திக் கடும் சேதத்தை விளைவித்தன.

---

## ஹைட்ரஜன் குண்டு அல்ல

வாஷிங்டன், மே 21

சீனு வெடித்த இரண்டாவது குண்டு ஹைட்ரஜன் குண்டு அல்ல என அமெரிக்க அணுசக்திக் கமிஷன் அறிவித்தது.

---

## டொமினிகனில் 24 மணி யுத்த நிறுத்தம்

சாந்தாடொமிங்கோ, மே 21

இறந்த உடல்களையும், காயமுற்றவர்களையும் அகற்றுவதற்காக 24 மணி நேரம் யுத்த நிறுத்தம் செய்ய டொமினிக்கன் குடியரசில் சம்பந்தப்பட்ட கட்சிகள் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

---

## ரூ. 8 கோடி மதிப்புள்ள நவரத்தினம்

### ஏழுமலையான் உண்டியலில் இருந்தது

திருமலை, மே 21

ஸ்ரீ ஏழுமலையான் உண்டியலிலிருந்து விலைமதிக்கமுடியாத அபூர்வ உயர்ந்த பெரிய கோமேதகமும் (நவரத்தினம்), ஒரு பச்சைக் கல்லும் கண்டெடுக்கப்பட்டது. இவ்வளவு விலை உயர்ந்த கற்கள் கண்டெடுக்கப்பட்டது இதுவே முதல் தடவை. இதன் மதிப்பே தெரியாதாம். சுமார் 8 கோடி ரூபாய் மதிப்புடையதாய் இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. கன்னிமலை மௌனசுவாமிகள் இந்த அபூர்வ கற்களை உண்டியலில் செலுத்தியதாகக் கூறப்படுகிறது.

ஏழுமலையானின் உண்டியலில் மே மாதம் 15 நாட்களில் மட்டும் ரூ. 7,41,758-59 பைசா சேர்ந்திருப்பதாயும், 14-ந் திகதி மட்டும் ஸ்ரீவெங்கடாசலபதிக்கு 18 கல்யாண உற்சவங்கள் நடந்ததாயும் கூறப்பட்டது.

வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ பெருமான் அபிஷேகத்திற்கு 100 பேர் கின்னங்களுக்குப் பணம் கட்டியிருந்தனராம். 17-ம் திகதியன்று மட்டும் மூன்று பேர் மட்டும் தலா ரூ. 1600-க்கு சகஸ்ர கலசாபிஷேகம் செய்தனர். இம் [illegible] திருமலையில் நடந்ததே இல்லை எனக் கூறப்படுகிறது.

# ஜெயகாந்தன் படத்திற்கு மூன்றுவது பரிசு

புதுடில்லி, மே 21

1964-ம் ஆண்டுக்கான ராஷ்டிரபதியின் தங்கப்பதக்கம் "சாருலதா" என்ற வங்க ளிப் படத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சத்யஜித்ரே டைரக்ட் செய்துள்ள இப்படத்தை திரு. ஆர். டி. பான்சல் தயாரித்துள்ளார். தயாரிப்பாளருக்கு இருபதினாயிரம் ரூபாயும் டைரக்டருக்கு ஐயாயிரம் ரூபாயும் ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

ஸ்ரீசேதன் ஆனந்தின் "ஹக்கீகத்" என்றபடம் இரண்டாவது பரிசு பெறுகிறது. ஸ்ரீ டி. ஜெயகாந்தனின் "உன்னைப் போல் ஒருவன்" என்ற படத்திற்கு மூன்றாவது பரிசு.

தமிழில் "கைகொடுத்த தெய்வம்" என்னும் திரைப்படம் ராஷ்டிரபதியின் வெள்ளிப்பதக்கத்தைப் பெறுகிறது. பழனி, சர்வர்சுந்தரம் ஆகிய படங்களுக்கு தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## வில்சன் இந்தியா-பாக். வருவார்

லண்டன், மே 21

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் வில்சன் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யப்போவதாய் அறிவித்திருக்கிறார்.

---

## ஏக்கருக்கு 8000 ருத்தல் தரும் நெல்விதை

திருவனந்தபுரம், மே 21

ஏக்கருக்கு 6000 முதல் 8000 ருத்தல் வரை விளைச்சல் தரும் புதுரக நெல்விதையை பிலிப்பைன்ஸிலிருந்து நாம் கொண்டுவந்திருப்பதாய் மந்திரி சுப்ரமண்யம் இங்கு நிருபர்களிடம் கூறினர்.

# ஓட்டலில் வேலை செய்த 25 வயது இளம் பீட்டர்

## இப்போது 12 அடுக்கு முதலாளி

பொன், மே 21

25 வயது இளைஞரான பீட்டர் மேற்கு ஜெர்மனியில் இன்று மிகப்பெரும் தொழிலதிபராக இருக்கிறார். நாட்டிலேயே மிகத் திறமையான தொழிலதிபரும் அவர்தான்.

இன்றும் மாணவராகவே இருந்துவரும் பீட்டர் மாணவர்களின் சங்கடத்தை உணர்ந்து அதைத் தீர்க்க முனைந்திருப்பதில் வியப்பில்லை.

பீட்டர் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல, நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த அவர் இங்கு வாழ்க்கை பிடிக்காமல் கடன்வாங்கி அமெரிக்கா சென்றார். அங்கு ஹோட்டலில் பாத்திரம் கழுவும் வேலையுட்பட 42 விதமான வேலைகளைச் செய்து 1000 டாலர் மட்டும் சம்பாதித்துக்கொண்டு தாயகம் திரும்பினார். இதை மூலதனமாகக்கொண்டு வியாபாரம் ஒன்றையும் துவங்கினர்.

முதலில் ஒரு கார் வாங்கி அதை வாடகைக்கு விட்டார். அதைத் தொடர்ந்து பல வாடகைக் கார்களுக்கு அவர் உரிமையாளரானர். படிப்படியாகப் பல தொழில்களைத் தொடங்கினர். இன்று அவரது அலுவலகத்தில் 20 பெரிய அதிகாரிகள் வேலைசெய்கிறர்கள். கல்லூரியில் பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம் பெறப் படித்துவரும் பீட்டர் கல்லூரி நேரம்போக மற்ற நேரங்களில் அலுவலக நிர்வாகத்தைக் கவனிக்கிறர்.

தற்சமயம் பொன் நகரில் 12 அடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்றை அவர் கட்டிவருகிறர். மாணவர்களுக்குக் குறைந்த வாடகையில் இடவசதியளிப்பதற்காக இந்த மாணவர் ஹோட்டலை அவர் கட்டுகிறர். இங்கு 800 மாணவர்கள் தங்குமிடம் கிடைக்காமல் முக்கியமாகத் திண்டாடுவதை நேரடியாக அறிந்துள்ள பீட்டர் தமது ஹோட்டலின் ஒரு பகுதியை வெளிநாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கிவைத்திருக்கிறர். இந்த ஹோட்டலைக் கட்டிமுடிக்க 56 லட்சம் ரூபா செலவாகும்.

பல லட்சம் ரூபாய் திட்டங்களைச் செலவாக்கும் மனத்துணிவு 25 வயது இளைஞர் களில் பெரும்பாலோருக்கு எந்தவிதமான கஷ்டநஷ்டங்களையும் தாங்கும் அபார மனுதிடம் கொண்டவராக இருக்கிறர். என் வாழ்நாள் முழுதும் சுதந்திரமான தொழிலதிபராகவே இருப்பேன். என்ன சங்கடங்கள் வந்தாலும் சமாளிப்பேன் என்றும் பீட்டர் திடமாகக் கூறுகிறர்.

# மோரிஸ்தீவில் இந்தியருக்கு விரோதமான கலவரங்கள்

லண்டன், மே. 21

இந்துமகா சமுத்திரத்தில் உள்ள மோரீஸ், ஸீசல்லீஸ் தீவுகளில் இந்தியர்களுக்கு விரோதமான கலவரங்கள் வளர்ந்துகொண்டு வருகின்றன.

அங்கு இந்திய-மோரீஸ் வகுப்பினரே பெரும்பான்மையினராய் இருக்கிறர்கள். அவர்களுக்கும் மைனாரிட்டிகளாய் உள்ள சிரியோல் வகுப்பினருக்குமிடையே இப்போது மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இதன்காரணமாகப் பிரிட்டனிலிருந்து பிரசித்திபெற்ற கோல்ட் ஸ்டிரீம் படையைச் சேர்ந்த 100 துருப்புகள் விமான மார்க்கமாக அங்கு அனுப்பப்பட்டன.

சென்ற வாரம் ஒரு கிராமத்தில் ஒரு பொலிஸ்காரரும், ஒரு மொரீஸ வெள்ளையரும் கொல்லப்பட்டதையடுத்து 100 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

போர்ட் லூயியில் ஒரு சினிமாக் கொட்டகையை சிரியோல வகுப்பினர் தாக்கினர்.

பிடிட்டிஷ்கயானாவில் இந்தியர்களும் ஆபிரிகர்களுக்குமிடையே நடைபெற்றது போன்ற கலவரங்கள் மோரீஸிலும் நடைபெறுவது குறித்து பிரிட்டிஷ்காலனி இலாகா மிகவும் கவலையடைந்திருக்கின்றது.

---

## சாஸ்திரி

புதுடில்லி, மே 21

இந்தியப் பிரதம மந்திரி திரு. சாஸ்திரி ஜனாதிபதி ராதாகிருஷ்ணனைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். தமது சோவியத் விஜயம் குறித்து அவர் பேசியதாகத் தெரிகிறது.

---

## ஜம்மு

புதுடில்லி, மே 21

கடந்த 4 நாட்களாக ஜம்முவில் பாகிஸ்தான் பெருமளவில் படைகளைக் குவித்துவருவதாய் இங்கு செய்திகள் கிடைத்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் நான்காவது சிரமதான இயக்கம் இன்று ஆரம்பம்

பருத்தித்துறை, வெள்ளி
சனிக்கிழமை வடமராட்சியில் நான்காவது சிரமதானம் பொலிகண்டியில் ஆரம்பமாகவிருக்கிறது.

பொலிகண்டி வாழ் மீனவர் கட்கென வீடமைப்புத் திட்டத்தின் பேரில் கட்டிமுடிக்கப்பட்ட வீட்டுப் பிரதேசங்களைச் செப்பனிடுவதுடன் பாதையமைப்பதையும் உள்ளடக்கிய இச் சிரமதானத்தில் சுமார் 800 தொண்டர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடமராட்சிப்பகுதி காரியாதிகாரி திரு ஜே.டி. ஆர்னல்ட் தொடக்கிவைக்கவிருக்கும் இச்சிரமதானத்தில் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, தொண்டமானாறு, பருத்தித்துறை அல்வாய் மேற்கு கிராமசேவகர்கள் பிரிவைச் சேர்ந்த தொண்டர்களுடன் சமசமாஜ,கம்யூனிஸ்ட்,தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளின் வாலிப முன்னணிகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

இச்சிரமதானத்தில் மீன்பிடித்துறை இலாகாவைச் சேர்ந்த சில பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள் என நம்பப்படுகிறது.

சிரமதானத் தொண்டர்கட்கான உணவு, தாகசாந்திக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதில் காரியாதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

## தபாற்சேவகர்களுக்கு பாதரட்சைகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி
தபால் தந்தி சேவையில் கடமையாற்றும் 7,500 தபாற் சேவகருக்கும், தந்தி ஊழியர்களுக்கும் பாதரட்சைகள் வழங்க தேசிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

## இந்து வாலிபர் சங்க மகாநாடு

சங்கானை, வெள்ளி
சங்கானை இந்து முற்போக்கு வாலிபர் சங்கத்தின் தலைவர் திரு. சு. சுந்தரலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றபோது தலைவர் தமது தலைமையுரையில் கூறியதாவது:

'எமது மொழி, கலை, கலாச்சாரங்களைப் பேணிவளர்க்க வேண்டுமாயின் எமது கிராமத்தில் இலக்கிய விழாக்களை நடத்தி அதன் மூலமே இளைஞர்களுக்கும் இவ்வித பற்றை வளரச் செய்யலாம், இவ்விழாக்களை நடத்துவதற்கு பெரியோர்களும் கல்விமான்களும் ஊக்கமளித்து வருவார்களேயானால் அதுமிகவும் வரவேற்கத் தக்கதாக இருக்கும்"

சங்கம் விரைவில் ஒரு இலக்கிய விழாவை நடாத்த ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் அதற்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமெனவும் தலைவர் கேட்டுக்கொண்டார்.

## 'சத்தியாக்கிரகம் செய்வோம்'

பருத்தித்துறை, வெள்ளி
நாகர்கோவில் நாகேஸ்வர வித்தியாலயத்தில் உயர் வகுப்புகள் இருந்தும் அங்கு நிலவி வரும் ஆசிரியர் பற்றாக்குறை நிரந்தரமான தலைமை ஆசிரியர் இல்லாமை ஆகிய குறைகள் விரைவில் நிவிர்த்தி செய்யப்படாவிடில் அவ்வூர் கிராம சேவை அங்கத்தவர்களும் மாணவரும் சத்தியாக்கிரகம் செய்ய உத்தேசித்துள்ளனர் என அறியப்படுகிறது.

இது விஷயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகட்குத் தெரிவித்தும் பயன் கிடைக்காத பட்சத்திலே கிராமசபை உறுப்பினர்களுள் ஒருவரான திரு க. சிவபிரகாசம் தெரிவித்தார்.

## மந்திரியின் விளக்கம்

பம்பலப்பிட்டி, வெள்ளி
பம்பாயிலிருந்து கப்பல்கள் வரத் தாமதமாகியதன் காரணத்தினாலேயே உருளைக் கிழங்குக்கும், பம்பாய் வெங்காயத்துக்கும் சிலகாலமாக தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் இப்போது இவை கிடைப்பதாகவும் வர்த்தக மந்திரு செனட்டர் எம். வி, பி. பீரிஸ் நேற்று நடைபெற்ற அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

## முத்தமிழ்மன்ற நிர்வாகிகள்

பருத்தித்துறை, வெள்ளி
புலோலி தெற்கு இளங்கோ தமிழ்மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மன்ற உப தலைவர் திரு. நா. கருணாநிதி தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்- திரு செ, ஜெகநாதன், தலைவர் திரு. வி. நாகரத்தினம், உப-தலைவர்கள்- ஆசிரியர் நா. நடராசா, திரு நா. கருணாநிதி, செயலாளர்- திரு சு. கணபதிப்பிள்ளை, உப செயலாளர்- திரு. ச. சிவராசசிங்கம், தனாதிகாரி- வே, கணபதிப்பிள்ளை, உப-தனாதிகாரி திரு. கு. மணிவண்ணன்.

திரு. சு. தங்கராசா மன்றத்தின் சேவைகளைப் பெரிதும் பாராட்டினார்.

கூட்டமுடிவில் மன்ற உபதலைவரின் இன்னிசைவிருந்தும் இடம்பெற்றது.

## கூட்டுறவுமுறையில் தச்சுத் தொழிற்சாலை

பருத்தித்துறை, வெள்ளி
இமையாணனில் கூட்டுறவு அடிப்படையில் தச்சுத் தொழிற்சாலை ஒன்றை அமைத்து அரசாங்கத்திடம் பதிவு செய்துதரும்படியும், குடியிருக்க நிலம் அற்றவர்கட்கு அரசாங்கக் காணிகளில் நிலம் பெற்றுத்தருவதுடன் வீடுகட்டித்தர அன்றேல் வீடுகட்ட கடன் உதவியாவது பெற ஒழுங்குசெய்துதரும்படியும் இமையாணன் இளைஞர் முன்னேற்றக்கழகம் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்திடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

கிராம வாலிபர்கட்கு இ, போ.ச, சீமெந்து தொழிற்சாலை போன்றவைகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தரும்படியும் தமக்கென கிராம அபிவிருத்தி நிலையம் ஒன்றை உருவாக்க உதவும்படியும் மகஜரில் கோரியிருப்பதுடன் வெண்காயக்கூடை பின்னும் [illegible] அவற்றை விற்றுப் [illegible] தரும்படியும் கேட்டுள்ளனர்.

# நாட்டின் நிதி நிலைமை மிக மோசமாகியுள்ளது

## பிரதமர் அறிவிப்பு

பம்பலப்பிட்டி, வெள்ளி
"நாட்டின் நிதி நிலைமை இப்போது மிகவும் மோசமான நிலையிலிருக்கிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யக்கூட இப்போது நிதிபோதாதிருக்கிறது என பிரதமர் திரு டட்லி சேனநாயகா நேற்று நடைபெற்ற அரசாங்க பார்லிமெண்டரி குழுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

பிரதமர் மேலும் தெரிவித்ததாவது;

இவ்வித மோசமான நிலையைச் சரிப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கும். இந்த நடவடிக்கைகள் பற்றி விரைவில் தெரியப்படுத்தப்படும்.

இப்போதுள்ள நிதிநிலையை சீர்படுத்த வேண்டுமானால் வெளிநாட்டு உதவி தாராளமாகக் கிடைக்க வேண்டும்.

இவைபற்றியெல்லாம் ஆராய்வதற்கு விவைிரல் உலகவங்கியின் குழு ஒன்று இங்குவிஜயம் செய்யும்.

அரசாங்கம் உண்மையில் தனது பிரச்னைகளைத் தீர்க்க உறுதி கொண்டுள்ளது என்று அபிப்பிராயம் தோற்றுவிக்கப்பட்டாலே வெளிநாட்டு உதவி தேவைக்கேற்ப கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

## தோலிருக்க சுளை விழுங்கி!

கட்டுவில், வெள்ளி
மட்டுவில் தெற்கில் பற்றைக் காணியொன்றில் ஆடுகளை மேயவிட்டுக்கொண்டிருந்த போது காணியின் பின்பக்கத்தால் அந்த ஆடுகளில் ஒரு கிடாய் கடத்தப்பட்டுச்சென்ற சம்பவமொன்று பகல்வேளையிலேயே நடைபெற்றிருக்கிறது.

ஆட்டைக் கடத்தியவர் யார் என்று கண்டுபிடிக்கவில்லையேயாயினும் அடுத்தநாள் அந்த ஆட்டின் தோலும், குடலும் வேறோர் காணியின் பற்றை மறைவில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## வித்தியாதரிசி இடமாற்றம்

கிளிநொச்சி, வெள்ளி
கிளிநொச்சிப்பகுதி வட்டார வித்தியாதரிசியாக இதுவரை கடமையாற்றிய திரு. கே. கனகசபாபதி சாவகச்சேரிக்கு இடமாற்றம்செய்யப் பட்டுள்ளார், அவரின் இடத்திற்கு திரு வி. அரசன் நியமிக்கப் பட்டிருக்கிறார்.


## ஞானசம்பந்தர் குருபூசை

கன்னாகம், சனி
புன்னாலைக்கட்டுவன் சைவப் பாடசாலை மாணவர்கள் திருஞானசம்பந்தர் குருபூசையை டந்தவாரம் நடத்தினார்கள். கீழ்ப்பிரிவு மாணவர்கள் ஞானசம்பந்தர் பாடல்களைப் பாடினார்கள்.


REGAL - JAFFNA
NOW SHOWING
The Show of Shows!!
THE
NAKED WORLD
(Eastman Color)



தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான
சவரின் வளையல்கள்
ஐந்துவருடம் உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்கநகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவஅமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப் படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36. M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ,அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ரூபா 5-00

M 42 ஜோடி ரூ. 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ. 8-50. M 27 ஜோடி ரூ. 12-50, M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ 15-00, M 29 ஜோடி ரூ. 15-00 M 47 ஜோடி ரூ. 18-50.

ஈ. பிரான்சிஸ் பெரேரா
அண்ட் கம்பனி

12, யட்டிநுவர வீதி, கண்டி.




இப்பொழுது திரையிடப்படுகிறது!

ஜெஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) | விஜிதா (ஹட்டன்) | தீபாவலி (நுவரேலியா)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி வெட்டுமில்லை விலை உயர்வுமில்லை

## உணவு மந்திரி அறிவிப்பு

டம்பனைப்பிட்டி, வெ ளி ஜனப்பிரதிநிதிகள் சபை நேற்று சபாநாயகர் சேர் அல்பர்ட் தலைமையில் கூடியது,

வித்தியோதய சர்வகலாசாலை கோர்ட்டிற்கு திருவாளர்கள் எஸ். டி. எஸ். ஜெயசிங்கா பி. டி. எஸ். கெரத், இ. எல். பி. ஹுருலே முதலியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப் பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

வித்தியாலங்கார சர்வகலாசாலை கோர்ட்டிற்கு திருவாளர்கள் பி. சி. இம்புலான எஸ். கே. சூரியாராச்சி, பெர்னாண்டோ சொய்சா முதலியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டதாக சபையில் அறிவிக்கப்பட்டது.

பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகா 1952ம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கும் அமெரிக்க கூட்டுறவுப்பகுதி நிவாரண உதவிகொடுப்பவர்களுக்குமிடையில் உள்ள ஒப்பந்தத்தையும் 1962ம் ஆண்டின் இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தத்தையும் 1962ம் ஆண்டில் இந்தியாவுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் பரிமாறப்பட்ட கடிதங்களையும் வர்த்தகத்தை நீடிப்பு செய்தது சம்பந்தப்பட்ட கடிதத்தையும் பாராளுமன்றத்தில் ஒப்படைத்தார்.

திரு வி. சி. டி. சொய்சா 1960ம் ஆண்டு ஜூலை மாதத்தில் பம்பலப்பிட்டியா தொகுதிக்கு போட்டியிட்டு தோற்ற வேட்பாளரெனறும் அவர் தற்பொழுது 'எயர் சிலோன்' சபையில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் போக்குவரத்துமந்திரி தோம்பை பாராளுமன்ற பிரதிநிதி திரு பீலிக்ஸ் பண்டாரநாயகா கேட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

மேலும் திரு பண்டாரநாயகாவின் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் தேசிய அமைச்சு மந்திரி திரு வி. ஏ. சுகததாசா, ஆர். ரி. டி. சில்வா இ. பேபா, சபையின் தலைவராக 1965ம் ஆண்டு நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

அரிசியில்லை கூட்டப்படமாட்டாதென்றும் அரிசிவெட்டு இருக்காதென்றும் திரு பீட்டர்கெனமன் கேள்விக்கு பதில் அளிக்கையில் உணவு மந்திரி திரு எம். டி. பண்டா கூறினர்.

---

### வானொலி நிகழ்ச்சிகள்

**சனி 22-5-65**

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00.)

காலை 6-55 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8 15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 திரை இசை,

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாரசாரம், 7-00 இசை நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு — 'சோதிடமும் ஒன்பது கிரகங்களும்' — திருமதி எம். பொன்னுத்துரை, 9-30 சித்திரம்— 'கலைமலிந்த கொடித்தொங்கல்' 10-00 நேயர் விருப்பம்.

**ஞாயிறு**

காலை: 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 துதிப்பாடல்கள் மறு ஒலிபரப்பு, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி - நடத்துபவர் வண. தோமஸ் பெர்னாந்தோ. 11-30 சிறுவர் மலர்.

பகல்: 12-15 நேயர்விருப்பம், 1-00 மத்தாப்பு.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 பாட்டு — தனலக்ஷ்மி விஸ்வலிங்கம், 5-45 திரை இசை,

இரவு: 6-15 கோட்டு வாத்தியம் - மனோரஞ்சிதம் மகேஸ்வரன், 7-00 பாட்டு - விஜய சவுந்தரி தாமோதரம்பிள்ளை, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மனை விளக்கு மாதர் நிகழ்ச்சி, 9-45 மாதர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

---

### போக்கு வரத்து மந்திரியின் நடவடிக்கை

பமபலப்பிட்டி, வெள்ளி புகையிரதப் பகுதின் புதிய நேர சூசியை ரத்து செய்து விட்டு, மற்றொரு புதிய நேர சூசியை, பல மாற்றங்களுடன் வெளியிட போக்கு வரத்து வரத்து மந்திரி திரு. ஈ. எல். பி. குருல்ல தீர்மானித்துள்ளார்.

---

கராச்சி, 21

இந்தியாவிலிருந்து இதுவரை 5, 14, 000 முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு விரட்டப்பட்டிருப்பதாக கராச்சி செய்திகள் கூறுகின்றன.

---

## School of Technology, Jaffna.

### 1965-66 COURSES

Candidates with J. S. C,

| | |
|---|---|
| Electrical Installation work<br>Motor Mechanism | Theory & Practical<br>One Year Course. |

Candidates with G C E. certificate with passes in Pure Maths., Physics & English

| | | |
|---|---|---|
| Electrical Engineering Practice (Prelim) | | City & Guilds Lond Exams. |
| -do- | (Inter) | |
| -do- | (Final) | |

Candidates with G. C E Certificate with Pure Maths English & preferably Drawing.

Authorised Draughtsmen - Surveyor General's Exams May 1966.

| | |
|---|---|
| Civil Engineering Drawing<br>Building Construction | School Certificate. |

Builders Quantities — City & Guilds Lond Exam

Applications close 5-6-65. Courses Commence on June 14, 1965. Forms and other particulars can be had from,

DIRECTOR

"CITADEL"
Chundikuli, Jaffna
12th May 1965

---

## SCHOOL OF TECHNOLOGY JAFFNA

### Electrical Engineering Practice

Courses leading to City & Guilds of London Institute Examination Commence on 14-6-65 for Preliminary, Intermediate & Final Exams. May 1966.

Past Successes of the School:

| | | |
|---|---|---|
| Preliminary 1962 | Sat 17 | Passed 11 |
| Preliminary 1963 | Sat 14 | Passed 12 (2 in one Sec) |
| Intermediate 1963 | Sat 10 | Passed 4 (1 in one Sec.) |
| Preliminary 1964 | Sat 12 | Passed 12 (2 in one Sec.) |
| Intermediate 1964 | Sat 12 | Passed 6 (2 in one Sec.) |
| Preliminary 1965 | Sat 25 | Results Awaited |
| Intermediate 1965 | Sat 14 | |

---

### School of Technology, Jaffna Scholarships.

A few free Scholarships valued at Rs. 50/- per month each are available at Poor Students with qualifications suitable for completing a Course for one year in Electrical Engineering Practice Preliminary or Intermediate (City & Guilds, London).

Applications must be received before 5-6-65, For further particulars, apply to:

Director

"Citadel"
Chundikuli, Jaffna.
14-5-65

---

### CLASSES

Admissions now Accepted for Gruvidyalaya Entrance:- Commerce, Accounts G C E (Ordinary & Advanced Level : Short-Hand, Typewriting, Book-Keeping, Commerce, Economics, Government, Chemistry, Physics, Mathematices (Pure, Applied Advanced), Arithmetic, Biology, English Etc College of Commerce, Court Road, Point-Pedro.

288

---

### விற்பனைக்கு

4 ஸ்ரீ 2778 பிளஸ்ஏ 3.5. தொடர்புகொள்ளவும்: ஆனந்தன், "சிவாவாசா", சுன்னாகம். 298

---

### காணி விற்பனைக்கு

வீடு கட்டுவதற்கேற்ற மிகவும் விசாலமான 2 பரப்புக்கு மேல் உள்ள காணி, யாழ்ப்பாணத்தில் 18/23, மணற்தரை லேன், திருநெல்வேலி தெற்கில் உண்டு. விபரங்களுக்கு:- 36, பலாலி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம. 290

---

### வரி விளம்பரம்

**கல்வி**

பி. ஏ. ஜி. ஏ. கியு, ஜி. சி. ஈ (உயர் சாதாரண) தரங்களை கலை விஞ்ஞானம், தமிழ், ஆங்கில வர்த்தக வகுப்புக்கள், சிங்களம், மத்திய எழுத்து வினைஞர் வகுப்பு அப்போதிகரிப் புகுமுக வகுப்பு ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யாழ். டூட்டோரியல்கல்லூரி கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்—யாழ்ப்பாணம் 279

---

**தொய்வு, கசம், நீரிழிவு, வெண்டோ முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தா கைலாசபிள்ளையார்கோவிலடி. யாழ்ப்பாணம்.**

---

### தேவை

வீடுகளுக்குச் சென்று விற்பனை செய்ய பெண் விற்பனையாளர்கள் தேவை. சம்பளம்: 10-00. விபரங்களுக்கு: T. விநாயகம் இன்டஸ்றீஸ், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 285

---

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வானில் சென்று மனோகரா தேயிலை விற்பனைசெய்வதற்கு தகுந்த அநுபவம் வாய்ந்தவர் தேவை, பிணைப்பணம் ரூபா 1000. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். மனோகரா தேயிலை நிலையம், வல்வெட்டித்துறை. 286

---

ஹோட்டல் நடத்தும் அநுபவம் வாய்ந்த ஒரு மனேஜர், ஒரு காஷியர் (பெண் அல்லது ஆண்), ஐஸ்கிறீம் தயாரிக்கும் அநுபவமுள்ள ஒருவர், இரு சப்ளையர்கள் தேவை. போதிய தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்: பரணி ஹோட்டல், யாழ்ப்பாணம். போன்: 325 292

---

### விற்பனைக்கு

F R மொடல் 'விஸ்ரர்' மரம் அரியும என்சின் வாட்டகல் 36 ஹோஸ் பவர், சக்கர வான்கள் மற்றும் சகல சாதனங்களும் விற்பனைக்கு உண்டு: விபரங்களுக்கு:- த. சுப்பிரமணியம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை, அல்லது "சந்திரா வெல்டிங் வேக்ஸ்" 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 283

---

பெலமான புது கோழிக் கூடுகள் விற்பனைக்கு இருக்கின்றன. 6 அடி×4 அடி. வாடிவீடு, கீரிமலை. 291

---

36, 20 பரப்புக் கொண்ட இரண்டு வயல்கள் மறுவன் புலவு காலத்துறை பகுதியில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு க. அருணானந்தம், 8, நஞ்சன் ரோட் (ஸ்டேஷன் ரோட்), வெள்ளவத்தை. தொலைபேசி: 82800 289

---

### காணவில்லை

எனது மகன் ஆறுமுகம் பாலசிங்கம், வயது 15. பொதுநிறம் உயரம்: 5 அடி. 19-4-65லிருந்து காணவில்லை. கடைசியாகக் கறுத்த காற்சட்டையும், வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார், நீல நிறக் கோடுடைய கிட்பாக் ஒன்றும் கொண்டுசென்றுள்ளார். முன் வாய்ப் பல்லொன்று உடைந்துள்ளது. காண்பவர் கிட்டிய பொலிஸ்நிலையத்தில் அறிவிக்கவும். ஆறுமுகம் பாக்கியம், 9/3, சிவப்பிரகாசம்வீதி, வண்ணார்பண்ணை. 294

---



அருந்துக

## நுவரெலியா

இது சிறந்த பியர் ஏனெனில்

- ★ 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
- ★ 8 சர்வதேசபரிசுகளைச் சுவீகரித்தது.
- ★ இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம் தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது. தெரிவதற்கு

பேல் ஏல்
லயன் லாகர்
ஜுபிலி ஏல்
சிங்ஹ பில்ஸ்னர்

சிலோன் புருவெரி லிமிடெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிதிநிலைமை மோசமாகியுள்ளது வெளிநாட்டு உதவிவேண்டும்" — பிரதமர்

பம்பலப்பிட்டி, வியாழன் நாட்டின் நிதிநிலைமை மிகவும் மோசமான நிலையிலுள்ளதென்றும் வருங்காலத்தில் இதனைச் சமாளிப்பதற்கு கணிசமான அளவு வெளிநாட்டு உதவியை அரசாங்கம் பெறுமென்றும் இன்று காலையில் அரசாங்கப் பார்லிமெண்டரிக் குழுக்கூட்டத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்கா பேசும்பொழுது தெரிவித்தார்.

1956-ம் ஆண்டு தமது அரசாங்கம ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தபோது பதின்மூன்று கோடியே என்பது லட்சத்துக்கதிமான ரூபாய்கள் இருந்ததென்றும தற்போது எழுபது லட்சம் ரூபாய்களுக்கு சற்றும் அதகமாக மட்டும்தான் பணம் இருக்கிறதென்றும் நாட்டில் சகலதும் வங்குரோத்தில் போய்க்கொண்டிருக்கிறதென்றும் எல்லாவற்றையும் சரிசெய்வதற்கு தமது அரசாங்கம் ஆவனசெய்யவேண்டுமென்றும் திரு. சேனநாயக்கா குறிப்பிட்டார்

"சென்ற அரசாங்கம் வெளிநாட்டினரின் விஷயத்தில் இரு தவறுகளை இழைத்துவிட்டன. முதலாவது எண்ணெக்கம்பனிகளுடைய நஷ்டஈடுகள் கொடுக்கப்படாமலிருந்தன, இரண்டாவது நிதிநிலைமை பற்றி எவ்வித சரியான கருக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படாமலிருந்தன, எமது அரசாங்கம் பதவிக்கு வந்த ஒரு மாதகாலத்தில் இவ்விரண்டினையும் ஓரளவு நல்லமுறையில் தீர்த்து வைத்துள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

வர்த்தக மந்திரி திரு. எம். வி. பி. பீரிஸ் பேசுகையில், உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதற்குக் காரணம் இவைகளை ஏற்றி வந்த கப்பல்கள் பம்பாயில் தாமதிக்கப்பட்டு நிற்பதே யென்று கூறினர். இன்னும் இரு வாரங்களுக்குள் இவைகளின் விலைவாசிகள் குறைந்துவிடுமென்றும் அவர் கூறினர்.

நெஸ்பிறே பால் மாவுக்கு இங்குதட்டுப்பாடுஇருந்தாலும் பாற்சபையினுல் விநியோகிக்கப்படும். விற்றல்பிறே மா போதியளவு கிடைக்கக்கூடியதாகவிருக்கிறதென்றும், வைத்திய அதிகாரிகள் இப்பால் மாவை சிறந்ததென உத்தரவாதம் அளித்துள்ளார்களென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில்

# பெருவெள்ளத்தை தடுக்க மந்திரியின் நடவடிக்கை

பம்பலப்பிட்டி, வியாழன் கொழும்பிலே பெருவெள்ளத்தைத தடுப்பதற்கான வழிவகைகள் குறித்தும், சேரியில வாழும் மக்களுடைய வீட்டுப் பிரச்னை குறித்தும் இன்று காலை ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் கொழும்பு மேயர் திரு. வின்சன்ட் பெரேராவுடன் பேச்சுவார்த்தைநடத்தினர். இப்பேச்சுவார்த்தையில் நகர சபை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பெருவெள்ளம் ஏற்படாமல் தண்ணீரை வெளியேற்றுவதற்கு கால்வாய்களை அதிகரிக்கவேண்டுமென மந்திரி மேயரிடம் தெரிவித்தார். சாக்கடைத் திட்டத்தை விரிவடையச்செய்வதற்கான ஏற்பாடுகள் விரைவில் கவனிக்கப்படவேண்டுமென்றும், இத்திட்டம் செய்வதற்கு கூடியளவு காலம் தேவைப்படுமாகையால் இரு வார காலத்தில் செய்யக்கூடிய ஒரு அவசரததிட்டம் தயாரிக்கப்படவேண்டும் என்றும் திரு திருச்செல்வம் கூறினர்.

சேரியில் வாழும் மக்கள் வசதியாக இருப்பதற்குமூன்று மாடிக் கட்டடத்தைக் கட்டிக் கொடுப்பதற்கான தமது முன்னைய சிபார்சுகளை செய்து முடிப்பதற்கு நிலங்களைச் சுவீகரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாமென்றும் கட்டடத்தைக் கட்டுவதற்கான திட்டத்தைத் தயாரிக்கலாமென்றும் மந்திரி தமது பேச்சுவார்த்தையின்போது சொன்னர்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில்

# லஞ்சகுற்றச்சாட்டு மசோதா சமர்ப்பிக்கப்பட்டது

பம்பலப்பிட்டி, வியாழன் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஜனப்பிரதிநிதிகள சபை கூடியபொழுது பிரதமர் டட்லி சேனநாயக்கா நதிப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி மசோதாவை சமர்ப்பித்தார்.

கல்லோயா நதிப்பள்ளத்தாக்குளெல்லாவற்றையும் இணைப்பதற்கான இம்மசோதா குறித்து பிரதமர் விளக்கம் கொடுத்தார். இக்கட்டத்தில் தோம்பே தொகுதி அங்கத்தவர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா "மந்திரிகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட"க்கூடாதென்று தெரிவித்தார். பிரதமர் பதிலளிக்கையில் மந்திரிகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும், முக்கியமான எந்த விஷயங்களையும் அரசாங்கத்தின் அனுமதி பெற்றே செய்கிருர்களென்றும் கூறினர்.

லஞ்சக் குற்றச்சாட்டுச் சட்டத்தை திருத்தக் கோரும் ஒரு மசோதாவை ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனப்பிரதிநிதிகள சபையில் சமர்ப்பித்தார்.

இம்மசோதாவில், லஞ்ச ஊழல் வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் நடைபெற அதிகாரம் வழங்குவதுடன் கோர்ட்டில் குற்றவாளிகளாகக் கண்டவர்களுக்கு ஏழுவருடத்துக்குக் குறைவான தண்டனையும், 5,000 ரூபா குற்றமும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லஞ்ச கமிஷனரின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் லஞ்ச ஊழல்களையும், தானுகவே அறியும் லஞ்ச விஷயங்களையும் விசாரணை செய்ய இந்த மசோதா லஞ்ச கமிஷனருக்கு அதிகாரம வழங்குகின்றது.

புதுடில்லி, மே 21 எவரெஸ்ட் சிகரத்தை அடையும் முயற்சியில் பாரதமலையேறும் கோஷ்டியினர் இரண்டாம் பிரிவு இப்போது முயற்சி மேற்கொண்டிருக்கிறது.

## பொலிஸாரால் விசாரணையால் பிரயாணிகள் பீதி

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் பிரயாணம் செய்வதற்காக தங்கியிருக்கும் பிரயாணிகளிடம் அங்கு கடமையாற்றும் பொலிஸ்காரர்கள் பல கேள்விகள் கேட்டு வருகிருர்களென்றும் இதனுல் பிரயாணிகள் பொிதும் கவலையடைந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

நேற்று மாலை யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தில தங்கியிருந்த பிரயாணிகளை இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் தனித்தனியாக எங்கே போகிறீர்? இலங்கைக்கு வந்து எத்தனை வருஷம்? சொந்த ஊர் எது? என்ற கேள்விகளைத் தொடுத்தார்களென்றும் வேட்டியணிந்திருந்த பிரயாணிகளை மட்டுமே அவர்கள் விசாரணை செய்தார்கள் என்றும் அறிடப்படுகிறது.

காரைநகரைச் சேர்ந்த ஒரு பிரயாணியை பொலிசார் கட்டாயப்படுத்தி பல கேள்விகள் கேட்டார்களென்றும், பிரயாணச்சீட்டு எடுப்பதற்காக வெளியில் நின்ற ஒரு வாலிபனிடரும் பல கேள்விகள் கேட்டார்கள் என்றும் தெரியவருகிறது.

## பெற்றோர் தினவிழாவில் வித்தியாதரிசிபேச்சு

வவுனியா, வெள்ளி "பொதுவாக பெற்றோரும் ஆசிரியரும் கல்வியோடு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரும் பூரண மனதுடன் ஒத்துழைக்கும் பாடசாலைகள்தான் தரத்தில் முதன்மை யடைகின்றன. இத்தகைய ஒத்துழைப்பு பெருமளவில் இருக்கிற படியால்தான் இப்பாடசாலை பெருமளவில் முன்னேறமுடிந்தது. இப்பாடசாலை ஆசிரியர்கள் எல்லாருடைய பாராட்டுக்கும் உரியவராவர்" இவ்வாறு பரந்தனிலுள்ள குமரபுரம் அரசினர்பாடசாலைப் பெற்ருர் தின விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய கிளிநொச்சிப் பகுதி வித்தியாதரிசி திரு க. கணபதி சபாபதி கூறினர்.

வட்டார வித்யதிரதரிசி மாறிபோகவிருப்பதால் தலைமை ஆசிரியர் திரு அ' சிவக்கொழுந்து சேவைநலம் பாராட்டு மடலொன்றைப் படித்துக்கொடுத்தார்.

## ஆஸ்பத்திரியில் நோயாளர்கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் வெளியாஸ்பத்திரியில் இன்றும் அநேக வெளிப்பகுதி நோயாளர்கள் டாக்டரிடமிருந்து மருந்து குறிப்புக்களை பெற்றும் மருந்து பெறமுடியாது பலமணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது.

டாக்டரிடம் குறிப்புத் துண்டுகளைப் பெற்ற நோயாளர் அத்துண்டுகளை குறிப்பிட்ட ஒருவரிடம் பதிவு செயயவேண்டும் என்பது ஏற்பாடு. ஆனல் அந்த குறிப்பிட்ட வேலையாளர் அவ்விடத்தில் இன்றும் பல மணி நேரம் காணவில்லை. இதனுல் நோயாளிகள் மருந்து பெறுவதற்காக காத்திருக்க வேண்டியிருந்தது.

இவ்விடத்தில் பொறுப்பான ஒருவரை யாழ்ப்பாண ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் கடமையாற்ற விடாதது நோயாளிகளுக்கு மிகவும் கஷ்டத்தை உண்டு பண்ணுகின்றதென்று நமது நிருபரிடம் பல நோயாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

## ராஜாஜி பேச்சு

சென்னை, மே 21 இந்தியா தனது வெளிநாட்டுக்கொள்கை பற்றியும், காஷ்மீர் பற்றியும் மீண்டும் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என ராஜாஜி கூறியிருக்கிருர்.

## 40 பாக். துருப்புக்கள்பலி

புதுடில்லி, மே 21 கடந்த புதன்கிழமை பாகிஸ்தான் துருப்புக்கள் ஒரு படைப்பிரிவுபலத்துடன் காஷ்மீர் யுத்தநிறுத்த எல்லைக்கோட்டை மீறி தாக்குதல் நடத்தியதாயும், இந்தக் கைகலப்பில் 40 பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது. 30 மீட்டர் தூரம் பாகிஸ்தான் துருப்புக்கள் முன்னேறியபோது அவர்கள் முறியடிக்கப்பட்டனர். பல ஆயுதங்களும், ராணுவ சாதனங்களும் கைப்பற்றப்பட்டன.

## தேசியசுவீப் முடிவுகள்

தேசியசுவீப் முடிவுகள் பின்வருமாறு:-

1-வது பரிசு
08 N 0149 ரூபா 27,580

இரண்டாவது பரிசு
02 Q 0899 ரூபா 11,012

3-வது பரிசு
07 Q 0105 ரூபா 2,753

ரூபா 187-55 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் விபரம்:

| | | |
|---|---|---|
| 08 B 0520 | 08 W 0735 | 04 J 0737 |
| 09 L 0690 | 12 B 0228 | 03 F 0263 |
| 01 D 0396 | 02 C 0246 | 09 A 0975 |
| 04 G 0433 | 10 V 0610 | 01 B 0909 |
| 08 E 0428 | 11 L 0686 | 03 A 0710 |
| 07 Q 0154 | 10 J 0959 | 08 P 0688 |
| 08 N 0320 | 07 E 0004 | 03 A 01/2 |
| 04 D 0430 | 08 S 0116 | 11 Z 0543 |
| 03 N 0907 | 12 T 0219 | 11 S 0989 |
| 10 K 0281 | 06 G 0624 | 07 O 0013 |
| 01 M 0352 | 01 C 0070 | 07 F 0551 |
| 11 E 0133 | 12 K 0959 | 10 B 0132 |
| 04 D 0277 | 09 O 0784 | 10 J 0165 |
| 08 D 0858 | 01 Z 0620 | 04 L 0800 |
| 06 Y 0459 | 02 H 0059 | 09 Z 0252 |
| 01 Z 0698 | 01 S 0578 | 03 H 0050 |
| 06 E 0151 | 06 P 0560 | 02 C 0958 |
| 05 F 0620 | 01 Q 0213 | 01 P 0858 |
| 02 H 0689 | 09 B 0353 | 04 X 0229 |
| 04 V 0870 | 09 Y 0771 | 08 K 0060 |
| 06 O 0793 | 03 P 0035 | 06 Z 0701 |
| 01 A 0603 | 09 S 0335 | 01 L 0258 |
| 07 D 0811 | 05 F 0563 | 06 B 0969 |
| 10 O 0501 | 06 M 0207 | 03 E 0284 |
| 04 G 0956 | 11 Y 0141 | 12 M 0693 |
| 12 V 0506 | 01 M 0731 | 04 U 0664 |
| 03 H 0406 | 09 X 0397 | 01 Z 0456 |
| 02 A 0811 | 03 Z 0033 | 02 S 0324 |
| 11 P 0080 | 10 P 0534 | 13 G 0596 |
| 10 Z 0658 | 08 K 0583 | 11 C 0983 |
| 05 Q 0097 | 13 R 0063 | 02 Z 0743 |
| 05 J 0473 | 09 T 0262 | 02 D 0596 |
| 03 O 0921 | 14 S 0413 | 08 V 0938 |
| | 02 U 0590 | |

## மக்கள்பணிமன்றம் அங்குராப்பணம்

யாழ்ப்பாணம், வெள்ளி 'மக்கள்பணிமன்றம்' யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள 104ம் இலக்க கட்டடத்தில் திரு அ. யோசப் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. மக்களுக்கு சகல துறைகளிலும் இயன்ற பணிகளைச் செய்யும் நோக்கமாகவே இம்மன்றம் ஆரம்பிக்கப்பட்டதாம்.

உத்தியோகத்தரவிபரம்

தலைவர்- புலவர் பி. ஆனந்தராயர் துணைத்தலைவர்- திரு அ.யோ. சபாநாதன் இணைச் செயலாளர்- திருவாளர்கள்- எஸ்.ஏ ஆர்.வேதநாயகம் என் ஆர். நெல்சன் பொருளாளர்- திரு ஆ. யோசப் 7 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## நாட்டிலும் நகரி..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டன. இன்னுமொரு சினிமாப் பாட்டு 'சிட்டுக்குருவி முத்தம் கொடுத்து' என்று ஆரம்பிக்கிறது. இதைத்கேட்கும் இளம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் மனதில்என்னென்ன எண்ணங்கள் முளைக்கின்றனவோ என்று தணிக்கையாளர்கள் கொஞ்சம் சிந்தித்திருந்தால் அதை அனுமதித்திருக்கமாட்டார்கள். நன்னெறியின் பாதுகாவலர்கள் என்றிருப்பவர்கள் இன்னுர் புன்னெறியில் அழைத்துச் செல்லப்படாது.

— 'வழிப்போக்கன்'

## தொழிலாளரின்நிலை மந்திரியின் கண்டனம்

பம்பலப்பிட்டி, வெள்ளி இலங்கையில் தொழிலாளரின்நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும் அவர்கள் மோசமாகச் சுரண்டப்படுவதாகவும் தொழில்மந்திரி ஜனுப் எம்.ஏச். முஹமது கவலை தெரிவித்துள்ளார்.

கொழும்பு வடக்குப் பகுதியிலுள்ள சில தொழில் ஸ்தாபனங்களுக்கு திடீர் விஜயம் செய்து நேரில் பார்வையிட்டபின்னரே மந்திரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொழில் கமிஷனர் திரு என் எல். அபயவீராவுடன் சென்ற மந்திரி தொழிலாளர்களுக்கு அவர்களுக்குரிய சம்பளம வழங்கப்படுவதில்லை என்பதையும் வேறு குறைபாடுகளையும்நேரில் கண்டறிந்தார்.

தொழிலாளர்களை முறையாக நடத்த முதலாளிமார்கள் மீது கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மந்திரி தொழில் இலாகா அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

## 'நல்லதருணத்தை கெடுக்கமுயற்சி'

யாழ்ப்பாணம், சனி 'மாவட்ட சபைகள் ஏற்படவிருக்கும் இந்த நல்ல தருணத்தைக் கெடுப்பதற்காக வட்டமேசைப் பேச்சுப் பேசி தமிழரசுக்கட்சிக்கும் ஐக்கியதேசிய கட்சிக்குமிடையே மித்திரபேதம் செய்யப் புறப்பட்டிருப்பவர்கள் பேரில் தமிழ்ப் பேசும் சமுதாயம் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஹாஜி வி எம் எம் அபுசாலி யாழ்ப்பாணம் கதிரல் வட்டாரத்தில் தமிழரசுக் கட்சிக் கிளையொன்றை அங்குரார்ப்பணஞ் செய்துவைத்துப் பேசுகையில் கூறினர்

அவர் மேலும் பேசுகையில் இலட்சிய அடிப்படையில் எழுந்த மக்கள் இயக்கங்கள் தமது இலட்சியக் குறிக்கோள்களைக் கைவிட்டுவிட்டு பின் தொடர்ந்து இயங்குவதென்பது நடவாத காரியமென்ருர்

திருவாளர்கள் பி எஸ் சேவியர், நா த செல்லத்துரை ஆகியோரும் பேசினர்

## ஸான்ஸிபாரிலும் நடவடிக்கை

ஸான்ஸிபார், மே 21 இந்தியர்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள். மோட்டார்வைட்டுகள் முதலியவற்றை ஸான்ஸிபார் அரசாங்கம் மேற்கொண்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## டட்லி, செல்வா ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே அது ஒரு அரசாங்கதஸ்தாவேஜு அல்ல. அதுமட்டுமல்ல இக்கேள்விக்குப் பதிலளிக்கவேண்டுமென்ற பொறுப்பு மந்திரிகள் கட்டுத்தில் இல்லவேயில்லை. இக்கேள்விகள் முழுவதையுமே நான் நிராகரித்திருக்கமுடியும். இது அரசாங்கமோ எனக்குக் கீழ் உள்ள இலாகாவோ சம்பந்தப்பட்ட விஷயமல்ல. இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க நான் மறுத்திருக்கமுடியும்.

என் எம்: இதே நிலையை நீங்கள் மேற்கொண்டிருந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும்

விற்பனைக்கு

டன்லப் இரண்டு இஞ்சி நீர் இறைக்கும் புதிய றபர் குழாய்கள் (இருப்புக்கம்பிகளும் பித்தளைக் கப்பிளிங்குகள் பூட்டப்பட்டவை) குறைந்த விலைக்கு விற்கப்படும். 25 அடி நீளம் ரூபா 200/- 30 அடி நீளம் ரூபா 225/- ஓட்டோஸ் லிமிடெட், யாழ்ப்பாணம். 897

இப்பத்திரிகை சுதந்திர வியாபார நிலையத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 56-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org